**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**வழக்கு எண் OS.No.518/2008 P.W.1**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | பிரகாஷ்சந்த் ஜெயின் |
| த/பெ. | நேமிக்சந்த் ஜெயின் |
| வயது | 49 |
| வசிப்பிடம் | தாம்பரம், செங்கல்பட்டு |
| தொழில் | அடகுகடை |

**முதல் விசாரணை 11.08.2025**

நான் இந்த வழக்கில் வாதி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 27.12.2005 தேதியிட்ட வாதி, முதல் பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.1 (ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகிறது). 28.05.2007 தேதியிட்ட 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2. 23.10.2008 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் நகல் வா.சா.ஆ.3. 22.03.1968 தேதியிட்ட 1ம் பிரதிவாதிக்கு, காஜா மொய்தீன் எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4. 10.12.2008 அன்று வாதி, முதல் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர்அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.5. 20.02.2023 தேதியிட்ட வில்லங்க சான்றிதழ் நகல் வா.சா.ஆ.6. 07.10.2010 தேதியிட்ட 2ம் பிரதிவாதி, முதல் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7. 08.05.2017 தேதியிட்ட 3ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த அடமான பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8. 10.12.2024 தேதியிட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.9. 10.12.2024 தேதியிட்ட வில்லங்க சான்று வா.சா.ஆ.10.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)